TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

No. 6A] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 18, 2004
Maasi 6, Subhanu, Thiruvalluvar Aandu–2035

Part VI—Section 2
(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
# சென்னை

## கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகள்

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (2003 ஆம் ஆண்டின் 36 வது சட்டம்) 86 வது பிரிவின் உட்பிரிவு 1 ல் கூறு (g) ல் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் அதனை இதன் பொருட்டு இயல்விக்கிற எல்லா அதிகாரங்களையும் செலுத்தி இதன் மூலம் கீழ்க்கண்ட ஒழுங்குமுறை விதிகளை இயற்றுகிறது.

இந்த ஒழுங்கு முறை விதிகள் அக்டோபர் 9, 2002 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழில் 25.9.2002 தேதியிட்ட த.நா.மி.ஒ.ஆ./ஒழுங்குமுறை/க.அ.4/1 எண்ணிட்ட அறிக்கையில் வெளியிடப்பட்ட 2002ஆம் ஆண்டு கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகளை ரத்து செய்கிறது.

1 (i) இந்த ஒழுங்குமுறை விதிகள் 2004 ஆம் ஆண்டு "தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகள்" என அழைக்கப்படும். குறுந்தலைப்பு, தொடக்கம்

(ii) அவை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2 இந்த ஒழுங்குமுறை விதிகளில் உள்ள சொற்கள் அல்லது சொற்றொடர்கள் 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம் அல்லது ஆணையத்தால் வெளியிடப்பட்ட மற்றைய ஒழுங்குமுறை விதிகளில் அவற்றிற்கு குறிக்கப்பட்டுள்ள அதே பொருள் வரையறைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். பொருள் வரையறைகள்

3 (i) ஆணையத்திற்கு அனுப்பப்படுகிற மனு, விண்ணப்பம் அல்லது குறையீடு ஒவ்வொன்றும் இந்த ஒழுங்குமுறை விதிகளில் உள்ள இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட உரிய கட்டணத்தைச் செலுத்தி அனுப்பப்படுதல் வேண்டும். கட்டணம் மற்றும் அபராதம்

(ii) இந்த ஒழுங்குமுறை விதிகளிலோ அல்லது அலுவல்முறை ஒழுங்குமுறை விதிகளிலோ ஆணையத்திற்கு செலுத்த வேண்டிய நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம் அல்லது அபராதத் தொகையினை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் செயலாளர் பெயரில் வழக்கமாகச் சென்னையில் பெறத்தக்கதாகவுள்ள வங்கி வரைவோலை அல்லது வங்கிக் காசோலை மூலமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். ரூ.500/–க்கு மிகாத தொகையினைச் செயலாளர், பணமாக ஏற்றுக் கொள்ளலாம். சென்னையில் பெறத்தக்கதான வங்கிக்காசோலையினைக் கொடுக்க உரிமம் பெற்றவர்கள் அனுமதிக்கப்படலாம்.

(iii) மேற்குறிப்பிட்டபடி ஆணையச் செயலாளரால் பெறப்பட்டத் தொகைகளை ஆணையம் அப்போதைக்கப்போது பணிக்கலாகும் வங்கி கிளைகளில் ஒரு வங்கிக் கணக்கிலே வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(iv) இந்த ஒழுங்குமுறை விதிகளில் வகைச் செய்யப்பட்டவாறு செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தொகையை அல்லது அபராதத் தொகையை இதன் பொருட்டு வெயியிடப்படும் ஒரு ஆணையின் மூலமாக கூட்டவோ, திருத்தவோ, மாற்றவோ அல்லது தள்ளுபடி செய்யவோ இந்த ஆணையம் உரிமையுடையதாகும்.

4 பொதுமக்களின் வசதி மற்றும் தகவல் ஆகிய நோக்கங்களுக்காக ஆணையத்தின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் கீழ்க்கண்ட படி வகைப்படுத்தப்பட வேண்டும். மனுக்கள் / விண்ணப்ப வகைகள்

(i) உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் த.நா.மி.ஒ.ஆ.உ.ம. எண்.................................ணாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ii) மின் கட்டண மனுக்கள் த.நா.மி.ஒ.ஆ.மி.ம. எண்......................................ணாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(iii) வழக்கு தீர்மானித்தல் மனு த.நா.மி.ஒ.ஆ.வ.தீ.ம. எண்..............................................ணாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(iv) மறு ஆய்வு மனு த.நா.மி.ஒ.ஆ.ம.ஆ. ம எண்.......................................ணாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(v) பல்வேறு மனு த.நா.மி.ஒ.ஆ.ப.ம. எண்.............................................ணாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(vi) பயனகம் அல்லது பொது அம்சம் குறித்தான மற்றும் பல்வகை மனு வகையில் வராத நுகர்வோர் குறையீடுகள் – பொது அலுவலக தீர்மான முடிவாக கருதப்படல் வேண்டும்.

5 சட்டத்தின் **32** ஆம் பிரிவின் உட்பிரிவு **3** ன் படி, மாநிலங்களுக்கிடையே மின்சாரம் செலுத்துதலுக்கு பணியமர்த்தப்பட்ட உற்பத்தி நிறுமம் மற்றும் உரிமம் பெற்றவரால் மாநில மின் சுமை பகிர்ந்தனுப்பு மையத்திற்கு செலுத்தத்தக்க கட்டணத்தை, ஆணையம் அவ்வப்போது முடிவு செய்யும். மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையத்திற்கு செலுத்தத்தக்க கட்டணம்

6 கீழே கண்டவற்றிற்கு கட்டண அமைப்பு முறை இப்பிரிவின்படி வகை செய்யப்படுகிறது. மின் சக்தி வழங்குகை ஒப்பந்தம் மற்றும் பல்வகைகள் உள்ளிட்ட மின் கட்டண மனுக்களுக்கான கட்டணங்கள்

(அ) மின் கட்டமைப்பு, பெருமளவு அல்லது சில்லறை மின்சக்தி ஆகியவற்றிற்கு மின் கட்டணங்களைத் தீர்மானித்தல்.

(ஆ) மின் செலுத்துகை மின் கட்டணம் மற்றும் அத்தகைய மின் கட்டணங்களின் மறு ஆய்வு மனுக்கள்,

(இ) மின் சக்தி வாங்கும் அல்லது கொள்முதல் செய்முறைக்கான ஒப்புதலுக்கான மனுக்கள் / விண்ணப்பங்கள்

(ஈ) பல்வகைகள்

| எண் | விண்ணப்பத்தின்/ மனுவின் தன்மை | கட்டணங்கள் |
| --- | --- | --- |
| 1 | மின் கட்டமைப்பு, பெருமளவு அல்லது சில்லறை மின்சக்தி ஆகியவற்றிற்கான மின் கட்டணத்தைத் தீர்மானித்தல் | தற்போதுள்ள உரிமம் பெற்றவரைப் பொறுத்தவரை முந்தைய ஆண்டிலுள்ள வருவாயில் (அல்லது) புதிய உரிமம் பெறுபவருக்கு ஆணையத்தால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தின் மூலம் அந்த ஆண்டில் எதிர் நோக்கும் வருவாயில் 0.025 விழுக்காடு |
| 2 | மின் செலுத்துகை மற்றும் மின் கட்டணங்கள் தீர்மானித்தல் | ரூ. 1 லட்சம் |
| 3 | மேலே (1) மற்றும் (2) எண்களில் கூறப்பட்ட மின்கட்டண ஆணையின் மறு ஆய்வினை | |
| | (அ) முதலில் மனு செய்த மின் கட்டண மனுதாரர்களினாலேயே முறையீடு செய்யப்படும்போது | ரூ.25,000/– |
| | (ஆ) ஒரு கழகத்தினால் / பிரிவினரால் முறையீடு செய்யப்படும் போது | ரூ.15,000/– |
| | (இ) ஒரு தனிப்பட்ட நுகர்வோரால் முறையீடு செய்யப்படுகிற போது | ரூ. 1,000/– |
| 4 | மின்சக்தி வாங்குகை அல்லது கொள்முதல் செய்முறைக்கான ஒப்புதல் | |
| | (அ) மரபு எரிபொருள் அடிப்படையில் அமைந்த மின்சக்தி உற்பத்தி இயந்திர நிலையம் | ஒரு மெகாவாட்டிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.2500/– |
| | (ஆ) ஒருங்கிணைந்த மின்உற்பத்தி உள்ளிட்ட மரபு சாரா மற்றும் புதுப்பிக்கத்தக்கதாயுள்ள மின்சக்தி மூல வளங்கள் | ஒரு மெகாவாட்டிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.2000/– |
| 5 | மின்சக்தி வாங்குகை அல்லது கொள்முதல் செய்முறை குறித்து பிறப்பிக்கப்படுகிற ஆணையின் மறு ஆய்வு | ரூ.50,000/– |
| 6 | மற்றைய பட்டியல்படுத்தப்பட்ட இனங்களில் வராத பல்வகை விண்ணப்பங்கள் | ரூ. 100/– |
| 7 | ஒரு கழகம் / குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட மற்றைய பட்டியல்படுத்தப்பட்ட இனங்களில் வராத பல்வகை விண்ணப்பங்கள் | ரூ.10,000/– |
| 8 | தட்டச்சுப் பிழைகள் அல்லது எழுத்துப் பிழைகள் அல்லது தவறுகள் ஆகிய காரணங்களுக்காக ஆணையத்தின் ஆணை எதனின் மறு ஆய்வு அல்லது திருத்தம் | கட்டணம் இல்லை |
| 9 | ஆணையத்தின் ஆணைகள் அல்லது பதிவுருக்கள் பார்வையிடுதல் | நாள் ஒன்றுக்கு ரூ.100/– |
| 10 | ஆணையத்தின் ஆவணங்கள் / ஆணைகளின் படிகள் வழங்குதல் | ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூ.3/– |
| 11 | ஒரு பயனகத்தின் செயற்பாட்டிற்கு எதிராக பயன்படுத்துபவரால் / நுகர்வோரால் கொடுக்கப்படுகிற முறையீடு | கட்டணம் இல்லை |

7 ஆணையத்தின் பணிப்புரைகள் மற்றும் சட்டத்தின் வழிவகைகள் செயல்படுத்தாமை மற்றும் பல்வேறு குற்றங்கள் முதலியவற்றிற்கான அபராதத் தொகை மற்றும் தண்டத் தொகை சட்டத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் அலுவல் ஒழுங்குமுறை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அபராதத்தொகை மற்றும் தண்டத்தொகை

8 சட்டத்தின் 127 ஆம் பிரிவின் உட்பிரிவு 1 ன் படி, மேல் முறையீட்டு மனுவிற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ஆணையத்தால் தனியாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

பிரிவு 127 (1) ன் படி மேல் முறையீட்டு மனுவிற்கு செலுத்தத் தக்க கட்டணம்

9 சட்டத்தின் 180 ஆம் பிரிவின் உட்பிரிவு 2 ல் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு அரசால் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் பலதரப்பட்ட உரிமங்களுக்கு உரிமக் கட்டணம் செலுத்த வேண்டும்.

உரிமக்கட்டணம்

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**இரா. பாலசுப்பிரமணியன்**

**செயலாளர்**